# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.187/2019

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 26–02–2026.

பெயர் = நெடுஞ்செழியன்

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 5 ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) நான் 1,2 ம் பிரதிவாதிகள் சங்கத்தில் நிர்வாக பொறுப்பில் உள்ளேனா என்றால் இல்லை. பாலசுப்பிரமணியன் என்பவர் பதவியில் உள்ளாரா என்றால் இல்லை. இதற்குமுன்பு நான் நிர்வாக பொறுப்பில் இருந்துள்ளேனா என்றால் ஆமாம் நிர்வாக குழு உறுப்பினராக இருந்துள்ளேன் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இருந்தேன். 2 ம் வாதி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் என சாட்சி கூறுகிறார். 2 ம் வாதி நிர்வாக பொறுப்பில் இருந்துள்ளாரா என்றால் ஆமாம் எனக்கு முன்பாக இருந்துள்ளார். நான் நிர்வாக பொறுப்பிலிருந்தபோது தேர்தல் நடந்ததா என்றால் இல்லை. இதற்கு முன்பு இருந்த இரண்டு சங்கத்திலும் தேர்தல் நடக்கவில்லை நிர்வாக கமிட்டியின் நியமனத்தின்பேரில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 5 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் பள்ளியில் செயலாளராக இருந்துள்ளார். 5 ம் பிரதிவாதி நிர்வாக கமிட்டியில் எத்தனை வருடங்கள் இருந்தார் என எனக்குத் தெரியாது. 5 ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகள் சங்கத்தில் உறுப்பினரா என்றால் இல்லை. லெட்சுமணபெருமாள் எப்போது இறந்தார் என்றால் 1971 ம் வருடம் இறந்தார். செல்வராஜ் எப்போது உறுப்பினராக சேர்ந்தார் என்றால் 1976 ல் சேர்ந்தார் என சாட்சி கூறுகிறார்.

(2) லெட்சுமணபெருமாளின் உறுப்பினர் எண் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.3 ல் 8 வது நபராக லெட்சுமணபெருமாள் பெயர் காட்டப்பட்டுள்ளது. அவரது பெயருக்கு அருகே பட்டுவியாபாரம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் உறுப்பினராக சேர்ந்த தேதி 27.06.1976 என்றால் சரிதான். இன்னொரு சங்கத்தில் அவர் 8 வது நபராக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 லும் 8 வது நபராகவும், பட்டுவியாபாரம் செய்பவராகவும் காண்பிக்கப்பட்டுள்ளார்

என்றால் சரிதான். 1971 ல் லெட்சுமணபெருமாள் இறந்துவிட்டார் என்றால் 1976 ல் மீண்டும் சேரமுடியுமா என்றால் முடியாது. வியாபார நிறுவனத்தின் பெயர் அல்லது தனிப்பட்ட நபர்களின் பெயர் ஏதாவது காண்பிக்கப்பட்டிருக்கும் என்றால் இரண்டும் சேர்ந்து காண்பிக்கப்படும் என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.3,4 ல் 9 வது நபர் சீதாலட்சுமி, சீதாலட்சுமி ஜவுளி ஸ்டோர் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தி.அண்ணாமலை இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் நபர் அண்ணாமலை Firm மட்டும் உள்ளது என்றால் சரிதான். 1வது நபர் நிறுவனம் இயங்குகிறதா என எனக்குத் தெரியாது.

(3) வா.சா.ஆ.3,4 ல் 2வது நபர் VASUS அண்ணாமலை இறந்துவிட்டார். இறந்து 3 அல்லது 4 வருடம் இருக்கும். 3 வது நபர் VASS சுப்பிரமணியம் இறந்துவிட்டார். அவர் இறந்து 2 அல்லது 3 வருடம் இருக்கும். 4 வது நபர் ஆ.குருசாமி இறந்துவிட்டார். 5 ம் நபர் சு.மாரிமுத்து இறந்துவிட்டார். 6 வது நபர் இ.சங்கரமகாலிங்கம் இறந்துவிட்டாரா என்றால் உயிருடன் இருக்கிறார். 7வது நபர் ஏ.தி.சண்முகபெருமாள் இறந்துவிட்டார். 9வது நபர் சீதாலெட்சுமி இறந்துவிட்டார். 10ம் நபர் CAK.ஆறுமுகம் இறந்துவிட்டார். 11ம் நபர் sri Balamurugan & co தொழில் நடக்கிறதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 12ம் நபர் தி.விஜயராணி இறந்துவிட்டார். 13ம் நபர் உயிருடன் இருக்கிறார். 14ம்நபர் எஸ்.சுப்பிரமணியம் இறந்துவிட்டார். 15 ம் நபர் உயிருடன் இருக்கிறார். 16 ம் நபர் எம்.பொன்னுச்சாமி, மலையரசன் கோவில் தெரு உயிருடன் இருக்கிறார். 17 ம் நபர் எஸ்.பாலசுப்பிரமணியன் உயிருடன் இருக்கிறார். 18வது நபர் பூமாலை டெக்ஸ் நிறுவனம் நடக்கவில்லை. 19வது நபர் எஸ்.ஆறுமுகம் இறந்துவிட்டார். 20வது நபர் எஸ்.சுப்பிரமணியன் உயிருடன் இருக்கிறார். 21வது நபர் உயிருடன் இருக்கிறார். 22 வது நபர் பன்னீர்செல்வம் இறந்துவிட்டார். 23 வது நபர் ஞானம்மாள் இறந்துவிட்டார். 24வது நபர் கனகசபாபதி இறந்துவிட்டார். 25வது நபர் அண்ணாமலை இறந்துவிட்டார்.

(4) 26வது நபர் கருப்பசாமி இருக்கிறார். 27வது நபர் பொன்னுச்சாமி உயிருடன் இருக்கிறார். 28வது நபர் கருப்பசாமி உயிருடன் இருக்கிறார். 29 வது நபர் யார் என்று தெரியவில்லை. 30 வது நபர் உயிருடன் இருக்கிறார் அவர்பேரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் அதனால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என சாட்சி கூறுகிறார். 31,32 வது நபர்கள் இறந்துவிட்டார். 33வது நபர் உயிருடன் இருக்கிறார். 34வது நபர் இறந்துவிட்டார். 36,37,38வது நபர்கள்

உயிருடன் இருக்கிறார்கள். 39 வது நபர் நான் தான் என சாட்சி கூறுகிறார். 40 வது நபர் உயிருடன் இருக்கிறார். 41,42,44,45,46,47,48,50,51 வது நபர்கள் உயிருடன் இருக்கிறார்கள். 43,49 வது நபர் யார் என தெரியவில்லை. நான் வைத்துள்ள நிறுவனத்தின் பெயர் ஸ்ரீவேல்முருகன் டையிங் ஒர்க்ஸ் ஆகும். 2 ம் வாதி பாலசுப்பிரமணியன் 21 வது நபராக உள்ளார் பட்டு வியாபாரம் செய்கிறார். என் பிராதில் எங்கள் நிறுவனத்தின் பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் தொழில் செய்து வருகிறோம் என்பதை பொறுத்து Tin Number, GST Number எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் தொழில் எதுவும் செய்யவில்லை என்பதால்தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(5) 3 ம் பிரதிவாதியை எதற்காக வழக்கில் சேர்த்தோம் என்றால் 2019 ம் வருடம் மகாசபை ஒன்று நடந்தது. அப்போது எங்களுக்கும் ரமேஷ்பாபு என்பவருக்கும் தேர்தல் வைக்கவேண்டும் என நாங்கள் சொன்னதால் வாக்குவாதம் ஏற்பட்டது. காவல்துறையினர் அங்குவந்து தேர்தல் வைத்து நிர்வாகிகளை தேர்ந்தெடுங்கள் என சொன்னார்கள். காவல்துறையினர் எங்களை இருங்கள் நிர்வாகத்தில் உள்ளவர்கள் எடுப்பார்கள் என சொன்னதால் சேர்த்துள்ளோம். 3 ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியை எதற்காக வழக்கின் தரப்பினராக சேர்த்தோம் என்றால் நிர்வாகிகள் தேர்தல் நடத்த அவகாசம் வேண்டும் என சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு நிர்வாகிகள் ஒரு 10 பேர் சேர்ந்துகொண்டு புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுத்து பதிவு செய்யப்போவதாக தெரியவந்தது. அதனால் மாவட்ட பதிவாளரை அணுகி எங்களையும் அழைத்து தேர்தல் நடத்த சொல்லி பதிவு செய்யுங்கள் என சொன்னோம் அதற்கு அவர் எந்த பதிலும் சொல்லாததால் அவரை தரப்பினராக சேர்த்தோம் என சாட்சி கூறுகிறார். 3,4 அரசு அலுவலர்களை தரப்பினராக சேர்த்துள்ளதால் மாவட்ட ஆட்சியரை கண்டிப்பாக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் அதனால் இவ்வழக்கு செல்லாது என்றால் சரியல்ல.

(6) மாவட்ட பதிவாளரை அணுகி சங்கத்திற்குள் பிரச்சனை உள்ளது தேர்தல் நடத்துங்கள் என கேட்டு மனு கொடுத்தோமா என்றால் ஆமாம். எப்போது மனு கொடுத்தோம் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்கள் முன்பு கொடுத்தோம். சங்கத்தேர்தல் நடத்த மாவட்ட பதிவாளருக்கு முழு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். அவர் நேரடியாக தேர்தலை நடத்துவார் அல்லது அருப்புக்கோட்டை சார்பதிவாளரை வைத்து

தேர்தலை நடத்துவார் என்றால் சரிதான். அவ்வாறு இல்லையெனில் அவரது பிரதிநிதிகள் நடத்துவார்கள் என்றால் சரிதான். சங்கபதிவாளர் தேர்தல் நடத்த வரவில்லையென்றால் சரிதான். நாங்கள் உயர்நீதிமன்றத்தை அணுகி மாவட்ட பதிவாளரை தேர்தலை நடத்த சொல்லி கேட்டோமா என்றால் இல்லை. ஏன் கேட்கவில்லை என்றால் எங்களுக்கு போதிய அறிவு இல்லை. தேர்தல் நடத்த வேண்டும் என தான் சொல்கிறோம். நாங்கள் தேர்தலை நடத்தவிடாமல் தடுத்துநிறுத்துவதற்காகத்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தேர்தலை சட்டப்படியாக நடத்தவேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 1,2 பிரதிவாதிகள் சங்கம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வருடம் வருடம் புதுப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். கடைசியாக 2018 ல் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

(7) 1,2 பிரதிவாதிகள் சங்கம் இன்றையதேதியில் புதுப்பிக்கப்படாத சங்கமாக உள்ளது என்றால் சரிதான். அதனால் ரமேஷ்பாபுவிற்கு தலைவராக செயல்பட உரிமையில்லை என்றால் சரியல்ல. புதிய நிர்வாக தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை நிர்வாக பொறுப்பை கவனிப்பார். சங்க சட்டவிதிகளில் மேலே சொன்னவாறு விதிகள் உள்ளதா என்றால் இல்லை. ரமேஷ்பாபுவிற்கு தேர்தல் நடத்தக்கூடாது அவரே தலைவராக இருந்துவர வேண்டும் என்பதால் தான் எங்களை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி செல்வராஜன் தேர்தல் நடத்தக்கூடாது என சொல்கிறாரா என்றால் ஆமாம். அவர் யாரிடம் அவ்வாறு சொன்னார் என்றால் என்னிடம் தான் சொன்னார். 5ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இருக்கிறாரா என்றால் ஆமாம். 5ம் பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக ஏன் முதலில் சேர்க்கவில்லை என்றால் 1,2 பிரதிவாதிகளே போதுமானது என நினைத்தோம். எங்கள் சங்கம் புதுப்பிக்கப்படாத சங்கமாக இருப்பதாலும் அனைத்து உறுப்பினர்களையும் இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் அவ்வாறு சேர்க்காமல் இருப்பதால் இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(8) சாயம் போடுபவர்கள், கூலி நெசவு வேலை செய்பவர்களை எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்க முடியாது என்றால் சரிதான். இதற்குமுன் இறந்துபோன நபர்களை நீக்கியுள்ளோமா என்றால் இல்லை. இறந்துபோன நபர்களுக்கு பதிலாக அவர்களுடைய நிறுவனத்தில் வேலை பார்க்கும் நபர்கள் வருவார்கள் அதற்கு சங்கவிதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1, 16, 18, 19, 32 ஆகிய 5

நிறுவன உறுப்பினர்களை நீக்கவேண்டும் என எதற்காக சொல்லியுள்ளோம் என்றால் 1, 18, 19, 32 நபர்கள் இறந்துவிட்டார்கள் என்பதால் நீக்கசொன்னோம். 16ம் நபர் உயிருடன் தான் இருக்கிறார் நீக்கவேண்டும் என தெரியாமல் சொல்லிவிட்டோம். 1, 18, 19, 32 அவர்களின் வாரிசுகள் அதே நிறுவனத்தில் தொழில் நடத்திவருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ரமாடெக்ஸ் நிறுவனம் சங்கத்திற்குள் வருவதால் நுழையவிடக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளோம். யார் வருகிறார் என தற்போது ஞாபகமில்லை. 3, 4, 7, 8, 10 நபர்களை இறந்துவிட்டார்கள் என்பதால் நீக்க சொல்லி கேட்டுள்ளோம்.

(9) நான் ஏற்கனவே இறந்துவிட்டதாக சொல்லியுள்ள நபர்களை நீக்க வேண்டுமா என்றால் ஆமாம். இறந்துபோன நபர்களை நீக்கிவிட்டு அவர்களின் சட்டப்படியான வாரிசுகளை சேர்த்து முறையாக தேர்தலை நடத்தவேண்டும் என கேட்கிறோம் என்றால் ஆமாம். தேர்தலை நடத்தவேண்டும் என்று பரிகாரம் கோர தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். ரமேஷ்பாபுவை தலைவராக காண்பித்துள்ளது தவறான நிலைப்பாடு என்றால் சரியல்ல. நான்தான் ரமேஷ்பாபுவுடன் கூட்டணி சேர்ந்துகொண்டு தேர்தல் நடத்த தடை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் 27/1975ன்படி 1,2 பிரதிவாதிகள் சங்கம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புதிய சங்க எண் கொடுத்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. புதிய சங்க எண் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து தாக்கல் செய்ய தயாராக உள்ளோமா என்றால் ஆமாம். 1,2 பிரதிவாதிகள் சொல்லியுள்ள சங்க எண் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3,4ல் உள்ள 8ம் நபர் 5ம் பிரதிவாதி என்றால் சரியல்ல.

(10) நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தேர்தலை நடத்த தயாராக உள்ளோமா என்றால் ஆமாம். ஆணையர் நியமனம் செய்யக்கேட்டு எப்போது மனுதாக்கல் செய்ய உள்ளேன் என்றால் வக்கீலிடம் தான் கேட்க வேண்டும். வா.சா.ஆ.5,6ல் 2019–2022 வரையான தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 2025–2028 வரை தேர்தல் நடத்த வேண்டுமென பிராதில் சீர்திருத்தம் செய்ய தயாராக உள்ளேன் என்றால் ஆமாம். ரமேஷ்பாபுவிற்கு எதிரான நபர்களை நீக்கம் செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக உள்ள என்னைப்போன்ற நபர்களை வைத்துமட்டும் தேர்தல் நடத்தவேண்டும் என்ற அவரது விருப்பத்தின்பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், 2ம் வாதியும் 2019 வரை

பணம் செலுத்தி ரசீது பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அதன்பின் தற்போது வரை ரசீது செலுத்தவில்லை என்றால் யாரும் வாங்கவில்லை என சாட்சி கூறுகிறார். நிர்வாக செலவிற்கு என்ன செய்கிறார்கள் என்றால் ஏற்கனவே பணம் உள்ளது. நிர்வாக மினி புத்தகம் யாரிடம் உள்ளது என்றால் தலைவர், செயலாளர் பொறுப்பில் உள்ளது.

(11) 5ம் பிரதிவாதி ஜவுளி வியாபாரம் பார்க்கிறாரா என்றால் விருதுநகர் ரோட்டில் கடைவைத்துள்ளதாக சொல்கிறார்கள் நான் பார்க்கவில்லை தற்போது எங்கு வைத்துள்ளார் என எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். 5ம் பிரதிவாதி ஜவுளி வியாபாரம் பார்த்து வருகிறார் வழக்கிற்காக தெரியாது என சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லாது தேர்தல் நடத்துவதை காலங்கடத்த வேண்டுமென்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.26 17:32:26 +0530